**மே – 08**

# TNPSC துளிகள்

- மறைந்த 'கவிக்கோ' S. அப்துல் ரஹ்மான், மறைந்த மெர்வின், மறைந்த A. பழனி, மற்றும் கவிஞர்கள் கொ. மா. கோதண்டம் மற்றும் இளமா தமிழ்நாவன் ஆகிய ஐந்து முக்கியத் தமிழ் அறிஞர்களின் இலக்கியப் படைப்புகள் தமிழக அரசால் சமீபத்தில் தேசியமயமாக்கப் பட்டு, அதற்கு உண்டான காப்பு உரிமத் தொகைகள் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப் பட்டன.
- சென்னையில் உள்ள கன்னிமாரா பொது நூலகத்தின் நுழைவாயிலில் உலகெங்கிலும் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக இயக்கங்களில் தாக்கங்களை ஏற்படுத்திய ஜெர்மனி நாட்டின் பொருளாதார நிபுணர் மற்றும் அரசியல் கோட்பாட்டாளர் கார்ல் மார்க்ஸ் அவர்களின் சிலையானது நிறுவப்பட உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளானது முதல் முறையாக பீகாரில் நடைபெற்று வருகிறது.
- கேரளாவைச் சேர்ந்த கோழிக்கோடு நகரானது சமீபத்தில் உலக சுகாதார அமைப்பின் முதியோரின் தேவைகளை உள்ளடக்கிய வகையில் வடிவமைக்கப்பட்ட நகரங்கள் மற்றும் சமூகங்களின் உலகளாவிய வலையமைப்பில் (GNAFCC) சேர்க்கப்பட்டுள்ளது.
- ஐதராபாத்தில் உள்ள 'கோல்ட்சிக்கா' நிறுவனமானது பயனர்கள் தங்கம் மற்றும் தங்க நகைகளை வாங்க, விற்க, பரிமாற்ற, குத்தகைக்கு விடுவதற்கு, எண்ணிமமயமாக்க மற்றும் பணமாக்குவதற்கான ஒரு திறனை வழங்கும் செயற்கை நுண்ணறிவினால் இயங்கும் தங்க உருக்கு ATM இயந்திரத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஐதராபாத் நகரானது 72வது உலக அழகிப் போட்டியை நடத்த உள்ளது.
- இந்திய இராணுவமானது, இரண்டு மாத கால அமர்நாத் யாத்திரைக்குப் பாதுகாப்பை வழங்குவதற்காக சிவா நடவடிக்கையினை (Operation Shiva) ஜம்மு மற்றும் காஷ்மீரில் தொடங்குகிறது.
- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT) மற்றும் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM) ஆகியவற்றின் மாதிரியின் அடிப்படையில், மும்பையில் இந்தியப் படைப்பாக்கத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (IICT) நிறுவப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஆஸ்திரேலிய நாட்டின் பிரதமர் அந்தோணி அல்பானீஸ், 21 ஆண்டுகளில் தொடர்ந்து இரண்டாவது முறையாக வென்று மூன்று ஆண்டு பதவிக் காலத்தினை வகிக்கவுள்ள முதல் பிரதமர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங்கின் மக்கள் செயல் கட்சி (PAP) ஆனது பொதுத் தேர்தலில் 97 பாராளுமன்ற இடங்களில் 87 இடங்களைப் பிடித்து அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.
- அங்கோலா நாடானது, சர்வதேச சூரிய சக்திக் கூட்டணி (ISA) கட்டமைப்பு மீதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதுடன் ISA கூட்டணியின் 123வது உறுப்பினராக மாறியுள்ளது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் பொது மக்கள் பாதுகாப்பு ஒத்திகை

- தமிழ்நாட்டில் உள்ள சில முக்கியக் கட்டமைப்புகளில் பொதுமக்கள் பாதுகாப்புப்

பயிற்சி மற்றும் ஒத்திகையானது சமீபத்தில் நடைபெற்றது.

- இது கல்பாக்கம் அணுமின் நிலையம் மற்றும் சென்னைத் துறைமுக அறக்கட்டளை வளாகங்களில் நடத்தப்பட்டது.
- இந்தப் பயிற்சியின் போது, உள்வரும் விமானத் தாக்குதலை எதிர்கொள்வதற்காக என இந்த இரண்டு முக்கியக் கட்டமைப்புகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான சில ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டன.




# தேசியச் செய்திகள்

## நாடு தழுவிய பொதுமக்கள் பாதுகாப்பு ஒத்திகை





- மத்திய அரசானது, மே 07 ஆம் தேதியன்று 259 இடங்களில் நாடு தழுவிய பொதுமக்கள்

பாதுகாப்பு ஒத்திகையை நடத்தியது.

- இந்த ஒத்திகைகளில் வான்வழித் தாக்குதல் எச்சரிக்கை ஒலிகளை எழுப்புவதும், 'எதிரி நாட்டுத் தாக்குதலின்' போதான பாதுகாப்பிற்காக என்று மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொதுமக்களுக்குப் பயிற்சி அளிப்பதும் அடங்கும்.
- இந்த ஒத்திகையானது 1968 ஆம் ஆண்டு பொதுமக்கள் பாதுகாப்பு விதிகளின் கீழ் நடத்தப் பட்டது.
- மாநில மற்றும் உள்ளாட்சி மட்டங்களில் தற்போதைய மக்கள் பாதுகாப்பு குறித்த வழி முறைகளின் தயார்நிலை மற்றும் செயல்திறனைப் பரிசோதிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- 1971 ஆம் ஆண்டு வங்காளதேசப் போருக்குப் பிறகு முதல் முறையாக இவ்வளவு பெரிய அளவிலான மாதிரி ஒத்திகை நடத்தப் பட்டது.

## சிந்தூர் நடவடிக்கை 2025




- இந்திய விமானப்படையானது, SCALP எறிகணைகள் மற்றும் AASM ஹேமர் குண்டுகள் போன்ற ஆயுதங்களை ஏந்திய ரஃபேல் ஜெட் விமானங்களை 2025 ஆம் ஆண்டு மே 07 அன்று அதிகாலை 23 நிமிடங்கள் நீடித்த சிந்தூர் நடவடிக்கையில் பயன்படுத்தியது.
- 25 நிமிடங்கள் நீடித்த இந்தத் தாக்குதல் ஆனது, அறியப்பட்ட தீவிரவாத முகாம்களை மட்டுமே குறிவைத்துத் தாக்கியது.
- இந்திய ஆயுதப்படைகள் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் ஒன்பது தீவிரவாத தளங்களைத் தாக்கி உள்ளன.
- இந்த நான்கில் பாகிஸ்தானின் பஞ்சாபில் உள்ள பஹாவல்பூர் மற்றும் முரிட்கே மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள முசாஃப்பராபாத் மற்றும் கோட்லி ஆகியவை அடங்கும் என்று கூறப் படுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் பாலகோட் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற உரி தாக்குதலுக்குப் பிறகு நடத்தப்பட்ட துல்லியத் தாக்குதல்களுக்குப் (surgical strikes) பிறகு நடத்தப்பட்ட மிகவும் விரிவான மற்றும் மிகவும் பரவலான எதிர் நடவடிக்கையினை இது குறித்தது.
- இந்த அனைத்து அமைப்புகளுக்கும், லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது மற்றும் ஹிஸ்புல் முஜாஹிதீன் ஆகிய தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்பு உள்ளது.
- பஹல்காமில் தாக்குதலில், ஆண்கள் மட்டுமே அவர்களின் மத அடையாளங்களைக்

கொண்டு தாக்கப்பட்டனர் என்ற கருதுகோளின் அடிப்படையில் ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயர் குறிப்பிடுவதாகத் தெரிகிறது.

- இலக்குகளைத் தாக்கிய பிறகு அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இந்தியா விளக்கத் தகவல் அளித்து உள்ளது.
- பாகிஸ்தானியப் பொதுமக்கள், பொருளாதார அல்லது இராணுவப் பகுதிகள் எதுவும் இதில் தாக்கப்படவில்லை.
- இந்தியாவின் இந்த சிந்தூர் நடவடிக்கை குறித்த பத்திரிக்கை விளக்கக் கூட்டத்திற்கு நாட்டின் விமானப் படைத் தலைவர் வியோமிகா சிங் மற்றும் கர்னல் சோபியா குரேஷி ஆகியோர் தலைமை தாங்கினர்.
- மகாராஷ்டிராவின் புனேவில் நடைபெற்ற பன்னாட்டு இராணுவப் பயிற்சியில் இந்திய இராணுவக் குழுவை வழி நடத்திய முதல் பெண் அதிகாரி சோபியா குரேஷி ஆவார்.

## விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சிகிச்சைத் திட்டம்





- நாடு முழுவதும் பதிவாகும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக சிகிச்சையளிக்கும் திட்டத்தினை அரசாங்கம் அறிவித்துள்ளது.
- இந்த முதன்மைத் திட்டத்தின் கீழ், விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு அந்த விபத்துக்கள் நடைபெற்ற நாளிலிருந்து அதிகபட்சமாக ஏழு நாட்களுக்கு அதிகபட்சமாக 1.5 லட்சம் ரூபாய் நிதியுதவிப் பெறுவார்கள்.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பின் படி, இந்தத் திட்டம் ஆனது 2025 ஆம் ஆண்டு மே 05 முதல் அமலுக்கு வந்துள்ளது.
- தேசிய சுகாதார ஆணையம் ஆனது, இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான முகமையாக (NHA) விளங்கும்.
- அந்தந்த மாநிலத்திற்கான இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முதன்மை நிறுவனமாக மாநிலச் சாலைப் பாதுகாப்புச் சபை விளங்கும்.
- "Golden hour" என்ற சொல்லானது, மோசமான விபத்து ஏற்பட்ட ஒரு மணி நேரத்திற்கு உள்ளான முக்கியமான காலக் கட்டத்தினைக் குறிப்பதால், அந்த காலக் கட்டத்தில்


உடனடி சிகிச்சை அளிக்கப்படும் போது பாதிக்கப்பட்டவரின் மரணத்தைத் தடுக்க அதிக வாய்ப்புள்ளது என்று வரையறுக்கப்படுகிறது.

## மரபணு திருத்தப்பட்ட முதல் அரிசி வகைகள்

- இந்திய அறிவியலாளர்கள், "மரபணு திருத்தம்" எனப்படும் 21 ஆம் நூற்றாண்டின் தாவர இனப்பெருக்கத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இரண்டு புதிய பருவநிலை ஏற்பமைவு கொண்ட அரிசி வகைகளை உற்பத்தி செய்து வரலாறு படைத்துள்ளனர்.
- இந்த மேம்படுத்தப்பட்ட அரிசி வகைகள் 'DRR Dhan 100 (Kamala)' மற்றும் 'Pusa DST Rice 1' என பெயரிடப்பட்டுள்ளன.
- இந்த வகைகள் பருவநிலை ஏற்பமைவு கொண்டவை மற்றும் பருவநிலை தகவமைப்பு கொண்டவை என்று கருதப்படுகின்றன.
- இதன் மூலம் பசுமை இல்ல வாயு உமிழ்வு ஆனது 20 சதவீதம் (32,000 டன்) குறைக்கப் படும்.
- இதன் மூலம், மரபணுக்கள் திருத்தப்பட்ட அல்லது GE அரிசி வகைகளை உருவாக்கிய உலகின் முதல் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இரண்டு புதிய வகைகளிலும் அயல் டிஎன்ஏ பொருத்தப்படவில்லை என்பதால் அவை மரபணு மாற்றம் (GM) செய்யப்பட்டவை அல்ல.




## பாக்லிஹார் அணை வழியாக செனாப் நதி நீர் திறப்பு




- செனாப் நதியில் உள்ள பாக்லிஹார் அணை வழியான நீர் ஓட்டத்தை இந்தியா நிறுத்தி

உள்ளது.

- ஜம்முவின் அக்னூர் பகுதியில் உள்ள செனாப் நதியின் நீர்மட்டம் ஆனது கடந்த பல ஆண்டுகளில் முதல் முறையாக இடுப்பு மட்டத்திற்கும் கீழே குறைந்தது.
- ரியாசி மற்றும் ராம்பன் மாவட்டங்களில் உள்ள சலால் மற்றும் பாக்லிஹார் புனல் மின் நிலைய/நீர் மின்னாற்றல் உற்பத்தி அணைகளின் அனைத்து மதகுகளும் உடன் மூடப் பட்டதைத் தொடர்ந்து நீர்மட்டமானது குறைந்துள்ளது.
- இந்த ஆற்றின் இயல்பான நீரோட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட புனல் மின் நிலையங்களாக கட்டப்பட்ட பாக்லிஹார் மற்றும் சலால் ஆகிய அணைகள் ஆனது, இந்தியாவின் நீர் வெளியேற்ற நேரத்தை ஒழுங்குபடுத்த உதவுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## உலக வங்கியின் நில மாநாடு 2025

- 2025 ஆம் ஆண்டு உலக வங்கியின் நில மாநாடானது, வாஷிங்டன்D.C. நகரில் அமைந்து உள்ள உலக வங்கி தலைமையகத்தில் நடைபெற்று வருகிறது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Securing Land Tenure and Access for Climate Action: Moving from Awareness to Action" என்பதாகும்.
- இந்த நிகழ்வில் இந்தியக் குழுவானது, அதன் மாற்றம் மிக்க SVAMITVA திட்டம் மற்றும் கிராம் மஞ்சித்ரா தளத்தினை முன்வைத்துள்ளது.
- SVAMITVA திட்டமானது, 1.6 லட்சம் கிராமங்களில் உள்ள சுமார் 24.4 மில்லியனுக்கும் அதிகமான வீடுகளுக்கு ஆளில்லா வான்வழி வாகனங்கள் மற்றும் புவியிடங்காட்டி தொழில்நுட்பம், சொத்து அட்டைகளைப் பயன்படுத்தி கிராமப்புறச் சொத்துக்களின் சட்டப்பூர்வ உரிமையை வழங்குகிறது.




## BRS COPs 2025

- பேசல், ரோட்டர்டாம் மற்றும் ஸ்டாக்ஹோம் ஆகிய உடன்படிக்கைகளுக்கான (BRS COPs) பங்குதாரர்கள் மாநாடுகள் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றன.

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த BRS COPs ஆனது, அபாயகரமான இரசாயனங்கள் மற்றும் கழிவு மேலாண்மை குறித்த உலகளாவிய நடவடிக்கையை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Make visible the invisible: sound management of chemicals and wastes" என்பதாகும்.
- இந்தியக் குழுவானது, இரசாயனங்கள் மற்றும் கழிவுகளின் முறையான மேலாண்மை, வளர்ந்து வரும் நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகல் மற்றும் நெகிழி மாசுபாடுகள் குறித்த நடவடிக்கைகளுக்கான வலியுறுத்தல் ஆகியவற்றினை ஆதரித்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## படையடுக்கு வான்கலத்தின் முதல் பறத்தல் சோதனை





- இந்தியா ஒரு படையடுக்கு வான்கலத்தின் முதல் பறத்தல் சோதனைகளை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டது.

- இந்த அமைப்பு ஆனது, இந்தியாவின் புவிக் கண்காணிப்பு மற்றும் உளவு, ஆய்வு மற்றும் தடங்காண் திறன்களை தனித்துவமாக மேம்படுத்தும்.
- இது பூமியிலிருந்து 17 முதல் 22 கிலோமீட்டர் வரையிலான படையடுக்கு மண்டலத்தில் செயல்படுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் உயரமான, ஆளில்லா வான்வழி வாகனம் ஆகும்.
- செயற்கைக்கோள்கள் அல்லது விமானங்களைப் போலல்லாமல், இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் சில நாட்கள் அல்லது சில வாரங்கள் நிலைநின்று, ஒரு தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் தகவல் தொடர்பு ஆதரவை வழங்குகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீடு – 2025





- இந்த முக்கியமான அறிக்கையானது Reporters Without Borders (எல்லைகளைக் கடந்த பத்திரிக்கையாளர்கள்-RSF) அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இப்பட்டியலில் கடந்த ஆண்டைப் போலவே 2025 ஆம் ஆண்டிலும் நார்வே நாடானது, முன்னணியில் இடம் பெற்றுள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து எஸ்டோனியா, நெதர்லாந்து, சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இந்த ஆண்டு எரித்திரியா (180) இப்பட்டியலில் கடைசி இடங்களில் இடம் பெற்றுள்ளது, அதைத் தொடர்ந்து வட கொரியா, சீனா, சிரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- கடந்த ஆண்டு 159வது இடத்திலிருந்த இந்தியா 2025 ஆம் ஆண்டில் 32.96 என்ற மொத்த மதிப்பெண்ணுடன் 8 இடங்கள் முன்னேறி 151வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் மதிப்பிடப்பட்ட 180 நாடுகளில் சுமார் 160 நாடுகள் ஊடக நிறுவனங்களின் நிதி உறுதித் தன்மை தொடர்பாக குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றன.
- தெற்காசிய நாடுகள் அனைத்தும் "மிகவும் மோசமான" ஒரு பத்திரிகைச் சுதந்திரச் சூழ்நிலை கொண்டவையாக வகைப்படுத்தப் பட்டன என்ற ஒரு நிலையில் நேபாளம் "பிரச்சனைக்குரிய சூழலைக் கொண்டவை" என்றும் மாலத்தீவுகள் "கடினமான சூழல் கொண்டவை" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

❖ மற்ற முக்கியப் பொருளாதாரங்களில், ஜெர்மனி 11வது இடத்திலும், ஐக்கியப் பேரரசு 20வது இடத்திலும், பிரான்சு 25வது இடத்திலும், பிரேசில் 63வது இடத்திலும், ஜப்பான் 66வது இடத்திலும் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## கேர்எட்ஜ் மாநிலங்கள் தரவரிசை 2025




❖ 2025 ஆம் ஆண்டு கேர்எட்ஜ் மாநில மதிப்பீடுகள் என்ற தரவரிசையில் மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கர்நாடகா ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.

❖ மேற்கு (மகாராஷ்டிரா, குஜராத்) மற்றும் தென் மாநிலங்கள் (கர்நாடகா, தெலுங்கானா, தமிழ்நாடு) முதல் ஐந்து இடங்களில் முன்னிலை வகிக்கின்றன.

❖ வடகிழக்கு, மலைப்பாங்கான மற்றும் சிறிய மாநிலங்களை உள்ளடக்கிய B குழுவில், 62.1 மதிப்பெண்களுடன் கோவா முதலிடத்தைப் பிடித்தது.

❖ இந்த வருடாந்திர அறிக்கையின் மீதான இரண்டாவது பதிப்பானது, பொருளாதாரம், நிதியியல், உள்கட்டமைப்பு, நிதி மேம்பாடு, சமூகம், நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற ஏழு முக்கியத் தூண்கள் வாரியாக சுமார் 50 செயல்திறன் குறிகாட்டிகளைப் பயன்படுத்தி இந்திய மாநிலங்களை மதிப்பிடுகிறது.

❖ ஆந்திரப் பிரதேசம் நிர்வாகப் பிரிவில் முதலிடத்தைப் பிடித்தது.

❖ குறைவான வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கடன் அளவுகளைக் கொண்ட நிதியியல் பிரிவில் ஒடிசா முதலிடத்தில் உள்ளது.

❖ பஞ்சாப் மற்றும் ஹரியானா உள்கட்டமைப்பில் முன்னணியில் உள்ளன என்பதோடு கேரளா சமூகக் குறிகாட்டிகளில் சிறப்பான செயல் திறனைக் கொண்டுள்ளது.

❖ தமிழ்நாடு சிறப்பானச் செயல் திறனுடன் முக்கியச் சமூக அளவீடுகளில் நிலையான முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது.

- தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்கள் வங்கிக் கடன் வழங்கீடு மற்றும் சுய உதவிக் குழு (SHG) கடன் வழங்கீட்டில் சில நேர்மறையான விளைவுகளைக் கொண்டுள்ளன.
- சுற்றுச்சூழல் தரவரிசையில், கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை முதலிடத்தில் உள்ளன.
- பீகார் (17வது இடம்), ஜார்க்கண்ட் (16வது இடம்), மற்றும் மத்தியப் பிரதேசம் (15வது இடம்) ஆகியவை தரவரிசையின் கடைசி இடங்களில் உள்ள பெரிய மாநிலங்களாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## IMF இந்திய நிர்வாக இயக்குநர் - K.V. சுப்பிரமணியன்




- சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி V. சுப்பிரமணியன் தனது பதவிக் காலமானது முடிவதற்குள் அரசாங்கத்தினால் இந்தியாவிற்குத் திரும்ப அழைக்கப் பட்டுள்ளார்.
- சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு நிர்வாக இயக்குநராக (இந்தியா சார்பில்) அவரை அப்பதவியில் இருந்து "உடனடியாக" நீக்குவதற்கு என்று அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- IMF அமைப்பானது இந்தியா, வங்காளதேசம், பூடான் மற்றும் இலங்கைக்கான நிர்வாக இயக்குநர் (ED) பதவி "காலியானதாக" தற்போது குறிப்பிட்டுள்ளது.
- IMF அமைப்பின் தினசரி அன்றாட நடவடிக்கைகளை நடத்துவதற்கு நிர்வாக வாரியம் பொறுப்பு கொண்டுள்ளது.
- இது உறுப்பினர் நாடுகள் அல்லது நாடுகளின் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 25

நிர்வாக இயக்குநர்களையும், அதன் தலைவராகப் பணியாற்றும் வகையில் நிர்வாக இயக்குநரையும் கொண்டுள்ளது.

- இந்த வாரியம் ஆனது வழக்கமாக ஒவ்வொரு வாரமும் பல முறை கூடுகிறது.

## உலகப் பத்திரிகைச் சுதந்திரப் பரிசு 2025

- 2025 ஆம் ஆண்டு யுனெஸ்கோ/கில்லர்மோ கானோ உலகப் பத்திரிகைச் சுதந்திரப் பரிசானது லா பிரென்சா- எல் டியாரியோ டி லாஸ் நிகரகுயென்சஸ் எனும் நிகரகுவா செய்தித் தாளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டிற்கு வெளியே வேறொரு நாட்டில் செயல்பட்டு வருகிறது.
- காசாவில் நடைபெற்று வரும் மோதல் தொடர்பான முக்கியத் தகவல்களைத் திரட்டிய பாலஸ்தீனப் பத்திரிகையாளர்களுக்கு 2024 ஆம் ஆண்டில் இப்பரிசு வழங்கப்பட்டது.
- இந்தப் பரிசுக்கு எல் எஸ்பெக்டடோர் எனும் கொலம்பிய செய்தித்தாளின் நிறுவனர் கில்லர்மோ கானோ இசாசாவின் நினைவாக பெயரிடப்பட்டுள்ளது.
- அவர் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதியன்று பொகோட்டாவில் உள்ள அதன் அலுவலகங்களுக்கு முன்னால் படுகொலை செய்யப்பட்டார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★